

# தந்தையின் மடல்

மகரகம,
கொழும்பு,
10.09.2017,

அன்புள்ள மகன் குமார்,

இங்கு நான் நலமாக இருக்கிறேன். உனது நலத்தை அறிய ஆவலாக உள்ளேன்.

நீ அனுப்பிய கடிதம் கிடைத்தது. அதில் நீ குறிப்பிட்ட நூல்களை வாங்கி இருக்கிறேன். வெசக் பௌர்ணமி விடுமுறையன்று வீட்டுக்கு வர எண்ணி இருக்கிறேன். அப்பொழுது உனக்கு வாங்கி வைத்துள்ள நூல்களையும் கொண்டு வருகிறேன்.

மகனே! பாடசாலை விடுமுறையை நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்; பாடங்களை ஒழுங்காக படி; அடுத்த ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை நடைபெற இருக்கிறது. அதை மறக்காதே நன்றாகப் படி.

அம்மா, அண்ணா, தங்கை அனைவருக்கும் என் அன்பினைத் தெரிவி.

இப்படிக்கு,
உனது அன்புத் தந்தை,

## அரும்பதங்கள்
### වදන් පෙළ

1. அன்புள்ள - ආදරණීය
2. நலம் - සුවය
3. ஆவல் - ආශාව/කැමැත්ත
4. விடுமுறை - නිවාඩුව
5. பரீட்சை - විභාගය
6. நூல் - පොත
7. முகவரி - ලිපිනය
8. நண்பன் - මිතුරා

## அழைப்பிதழ்

<u>*கட்டடத் திறப்பு விழா*</u>

*எமது பாடசாலையில் புதிய கட்டடத் திறப்பு விழா நடைபெற உள்ளது.*

*காலம் - 2017.03.03 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 03.30 மணிக்கு,*

*இடம் - விஹாரமஹா தேவி பாடசாலை வளாகம்*

*தலைவர் - திரு. எஸ். ரஞ்சன் (வித்தியாலய தலைவர்)*

*பிரதம அதிதி - மகாண கல்வி அமைச்சர்*

*அன்பர்கள், நண்பர்கள், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள், ஊர் மக்கள் அனைவரும்,*

*வருக! வருக! வருக!*

*நன்றி*

*ஏற்பாட்டுக் குழு,*
*விஹார மஹா தேவி வித்தியாலயம்,*
*கண்டி.*

## அரும்பதங்கள்
## වදන් පෙළ

1. திறப்பு விழா - විවෘත කිරීමේ උත්සවය
2. அழைப்பிதழ் - ආරාධනා පත්‍රිකාව
3. காலம் - කාලය
4. இடம் - ස්ථානය
5. பிரதம அதிதி - ආරාධිත අමුත්තා
6. பழைய மாணவர் - ආදි ශිෂ්‍ය
7. நலன் விரும்பி - සුභ පතන්නන්
8. அனைவரும் - සියළුදෙනාම

## தொழில்முறைக் கடிதம்

பியதாச,
காலி வீதி,
கொள்ளுப்பிட்டி.
04.01.2017

கௌரவ முதலமைச்சர்,
மேல் மாகாணம்,
கொழும்பு.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு,

**<u>சேதமடைந்த பாதையை புனரமைப்பது தொடர்பாக,</u>**

பல வருடங்களாக எமது பிரதேசத்தில் பிரதான பாதைக்குச் செல்லும் பாதை திருத்தப்படாமையால் குன்றும் குழியுமாக உள்ளது. அதனால் தினமும் இப்பாதையில் பிரயாணம் செய்யும் பாடசாலை மாணவர்கள், சிறுவர்கள், நோயாளிகள், தொழிலுக் குச் செல்வோர் பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர்.

எனவே இப்பாதையைப் புனரமைத்துத் தரும்படி இப்பிரதேச மக்கள் சார்பில் மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

நன்றி

இப்படிக்கு,
உண்மையுள்ள,
தி . பியதாச.

## அரும்பதங்கள்
වදන් පෙළ

1. முதலமைச்சர் - මහ ඇමති
2. பிரதேசம் - ප්‍රදේශය
3. தினமும் - දිනපතා
4. நோயாளி - රෝගියා
5. புனரமைப்பு - අලුත්වැඩියාව

## சுயவிபரம் (ජීව දත්ත)

1. முதல் எழுத்துக்களுடன் பெயர் -
2. முழுப் பெயர் -
3. விலாசம் -
4. பிறந்த திகதி -
5. வயது -
6. ஆண்/ பெண்

7. தேசிய அடையாள அட்டை இலக்கம்

8. கிராம சேவகர் பிரிவு

9. மாவட்டம்

10. மாகாணம்

11. கல்வித் தகைமை
 .............................
 .............................
 .............................

12. வேறு தகைமைகள்



**செயற்பாடு - 1**
ක්‍රියාකාරකම - 1

**வெசக் விழாவில் கலந்து கொள்ளுமாறு உங்கள் கிறிஸ்தவ நண்பர் ஒருவருக்கு கடிதம் ஒன்று எழுதுங்கள்.**
වෙසක් උත්සවයට සහභාගිවන ලෙස ඔබගේ ක්‍රිස්තියානි ආගමේ මිතුරකුට ලිපියක් ලියන්න.



**செயற்பாடு - 2**
ක්‍රියාකාරකම - 2

**உங்கள் பிரதேசத்துக்கு சுத்தமான குடிநீர் வழங்குமாறு நீர்ப்பாசன வடிகால் அமைச்சுக்கு ஒரு கடிதம் எழுதுங்கள்.**
ඔබගේ ප්‍රදේශයට පිරිසිදු පානීය ජලය ලබාදෙන ලෙස ජල සම්පාදන හා වාරිමාර්ග අමාත්‍යාංශයට ලිපියක් ලියන්න.



## செயற்பாடு - 3
## ක්‍රියාකාරකම - 3

**இல்ல விளையாட்டுப் போட்டிக்கான அழைப்பிதழ் ஒன்றினைத் தயாரிக்குக.**

නිවාස ක්‍රීඩා තරගය සඳහා ආරාධිත පත්‍රිකාවක් නිර්මාණය කරන්න.